மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க (ஆம்)

மறுப்போரே இல்லை என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம்

தீர்மானம் நிறைவேறியது

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

(ஈ) மாநகராட்சி சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.